**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(24.08.2016 முதல் 28.08.2016)**

**அறிக்கைஎண் :068/2016** **தேதி: 23.08.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29 °செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: ஈரோடு (24.08.2016 முதல் 28.08.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசான துறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 62 முதல் 68 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24.08.16 | 0 | 33 | 23 | 5 | 75 | 62 | 15 | தெற்கு |
| 25.08.16 | 0 | 33 | 23 | 5 | 75 | 62 | 15 | தெற்கு |
| 26.08.16 | 0 | 33 | 23 | 5 | 75 | 62 | 15 | தெற்கு |
| 27.08.16 | 1 | 32 | 22 | 6 | 80 | 68 | 15 | தெற்கு |
| 28.08.16 | 1 | 32 | 22 | 6 | 80 | 68 | 15 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் முன்பட்ட கரும்பிற்கும், 5 மாதத்திற்கு மேலான வாழைக்கும் முட்டு கொடுக்கவும்.
- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும்.
- அடுத்த 3 நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் அறுவடை செய்ய கடலையினை நன்கு காயவைத்து சேமிக்கவும்.
- காற்றின் வேகம் மற்றும் மேகமூட்டம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க தேவையான அளவு குடிநீர் கொடுக்கவும்

**குறுஞ்செய்தி**

- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் முன்பட்ட கரும்பிற்கும், 5 மாதத்திற்கு மேலான வாழைக்கும் முட்டு கொடுக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை